Case No. STC.No. 58/2022 ம.சா. 1 சரவணன் த/பெ. மோகனவேல் வயது 51
02.05.2023

( எதிரி ஆஜர்.)

சாட்சி மீண்டும் மனுவின் பேரில் வரவழைத்து சத்திய பிரமாணம் செய்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பழைய இருச்சக்கர வாகனம் வாங்கி விற்று தொழில் செய்து வருகிறேன். நான் எத்தனை வருடங்களாக தொழில் செய்து வருகிறேன் என்றால் 20 வருடங்களாக தொழில் செய்து வருகிறேன். 19/1 பி.ஜே. நேரு தெரு, வாணியம்பாடி மாஸ் ஆட்டோ கன்சல்டிங் என்ற கடைவைத்து நடத்தி வருகிறேன். வரவு செலவு கணக்கை நான் எழுதி வைத்துளளேனா என்றால் இல்லை. எனது வியபாரத்திற்கு நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. நான் எத்தனை வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் 2 வங்கியில் கணக்கு வைததுள்ளேன். அது யூனியன் பேங்க் ஆப் இந்தியா தேவஸ்தானம் கிளை, கத்தோலிக் சிரியன் வங்கி, வாணியம்பாடி கிளையில் கணக்கு வைத்தள்ளேன். நான் இரு வங்கியிலும் எப்போது இருந்த பணபறிவர்த்தனை செய்து வருகிறேன் என்றால் சுமார் 20 வருடங்கள் இருக்கும்.

நான் ஒவ்வொரு வங்கியிலும் பணபறிவர்தனை செய்து வந்தேன் என்றால் கத்தோலிக் சிரியன் வங்கியில் சுமாராக ரூ.20 லட்சம் வரை இன்னாள் வரை செய்து இருப்பேன். யூனியன் பேங்க் ஆப் இந்தியால் ரூ.10 லட்சம் வரை இன்னாள் வரை பணபறிவர்த்தனை செய்து இருப்பேன். நான் எதிரிக்கு கொடுத்த பணமானது எந்த வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேன் என்றால் ரொக்கமாக வீட்டில் வைத்திருந்த பணத்தைகொடுத்தேன். நான் வீட்டில் எப்போதும் பணம் வைக்கும் பழக்கம் உண்டா என்றால் உண்டு. குறைந்தது 7 அல்லது 8 லட்சம் வைத்து இருப்பேன். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவர் ரியல்எஸ்டேட் தொழில் செய்வதால் இருச்சக்கர வாகனம் வாங்குவதற்கும் என்னிடம் வந்துள்ளார் அதன் மூலமாக எனக்கு பழக்கம். இருச்சக்கர வாகனத்தை எப்போது வாங்க வந்தார் என்றால் 2, 3 வருடத்திற்கு முன்பு இருக்கும். அவர் என்னிடம் இருச்சக்கர வாகனம் வாங்கினாரா என்றால் அவர் என்னிடம் பணம் கொடுததார் அதனால் அவருக்கு வாகனமும் அதனுடைய ஆவணமும் கொடுத்து வீட்டேன். என்னிடம் இந்த நபர் வாகனத்தை வாங்க வந்தார், விற்க வந்தார் என்று நான் கணக்கு ஏதாவது வைத்துள்ளேனா என்றால் இல்லை. இன்னாள் வரை எனக்கு கணக்கு வைக்கும் பழக்கம் இல்லை என்றால் சரிதான். அதனால் வாகனம் எதிரி வாங்கவந்ததின் மூலமாகதான் எனக்கு பழக்கம் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று சொன்னால் அதற்கு முன்னாளும் எதிரி எனக்கு பழக்கம் தான்.

எதிரிக்கு 6 லட்சம் கொடுக்கும்போது யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. 6 லட்சத்தை எதிரி எப்போது கேட்டார் எப்போது கொடுத்தேன் என்றால் 11.10.2021ம் தேதியில் கேட்டார் அதே தேதியில் பணத்தை நான் கொடுத்தேன். மேற்படி விவரத்தை நான் வழக்கிறஞர் அறிவிப்பிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 6 லட்ச ரூபாயை என்ன வகையான ரூபாய்தாள்களாக கொடுத்தேன் என்றால் அனைத்தும் 500 ரூபாய் தாள்கள். 500 ரூபாய் தாள் என்றால் எத்தனை கட்டுகள் கொடுத்தேன் என்றால் 12 கட்டுக்கள். 11.10.2021ம் தேதி எததனை மணிக்கு நான் பணத்தை கொடுத்தேன் என்றால் காலை 10.00 மணி இருக்கும். பணம்கொடுத்த போதுஎன்னிடம் காசோலையை எதிரி கொடுத்தாரா என்றால் இல்லை. பணம் கொடுத்த போது எதிரி எந்த ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பணத்தை எதிரி கேட்டவுடன் எடுத்து கொடுத்தேன் அவர் அதை எடுத்து சென்று விட்டார் என்றால் சரிதான். பணத்தை எப்போது திருப்பி தருவதாக கூறினார் என்றால் ஒரு மாதத்தில் திருப்பி தருவதாக கூறினார். 11.11.2021 ம் தேதி நான் கேட்டேன்.

( இந்நீதிமன்றம் நீதிமன்றத்தின் நேரம் முடிவடைந்து 06.15 மணி ஆகிறது என்றும் இன்னும் பிடியாணைகளை நிறைவேற்றும் பணிகள் இருப்பதால் குறுக்கு விசாணையை மற்றொரு நாள் ஒத்திவைக்கலாம் என்று சொன்ன போது புகார்தாராரும் புகார்தாரின் வாக்கறிஞரும் ஒப்புக்கொள்ணடுள்ள நிலையில் எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை செய்து இருந்த கற்றநிந்த வழகக்றிஞர் திரு.திருப்பதி அவர்களும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் எதிரியின் தரப்பு வழக்கறிஞர் திரு கண்ணதாசன் இந்நீதிமன்றததை பார்த்து ஒரு வழக்கு இருக்கும் வழக்கறிஞரையும் பல வழக்குகள் இருக்கும் வழக்கறிஞர்களின் வழக்குகளை வெவ்வேறாக பார்ப்பதாக திறந்த நீதிமனற்த்தில் அனைத்து வழக்கறிஞர்கள் மற்றும் குற்றவாளிகள் மேலும் நீதிமன்ற ஊழியர்கள் முன்னிலையில் நீதிமன்றத்தில் கூச்சல் போட்டும், முறைத்தும், பேசிவிட்டு நீதிமன்றத்திற்கு மரியாதை தராமல் நீதிமன்றத்தில் இருந்து வெளியே சென்று விட்டார். இந்நீதிமன்றத்தில் புகார்தாரர் சாட்சி 1 ன் குறுக்கு விசாரணையை ஒத்தி வைக்கபபடுகிறது. மேலும் இன்று எதிரியின் வழக்கறிஞர் திரு. கண்ணதாசனுடன் சேர்ந்து வக்காளத்து தாக்கல் செய்த வழக்கறிஞர் திரு. திருப்பதி அவர்கள் தன் பெயரில் உள்ள வக்காளத்தை திரும்ப பெற்றுக்கொள்வதாக கூறியுள்ளார். அதை இந்நீதிமன்றம் ஏற்கிறது.)

சாட்சி கையொப்பம்

(Sd./-) சரவணன்

Taken down by me in open court and ready over to the witness in the presenceof the accused and admitted by the witness to the correction.

(Sd./-)R.S.Praganthaa,,
Judicial Magistrate, Vaniyambadi.